Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 346

செவ்வாய்க்கிழமை 07 நவம்பர் 2023

ஐப்பசி 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# ஆளுநரின் தடையையும் மீறி புத்தர்சிலைகள் நேற்று வைப்பு

## திருகோணமலையில் பதற்றம்



**திருகோணமலை, நவம்பர் 7**

**திருகோணமலை, இலுப்பைக்குளம் பகுதியில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் தடை யுத்தரவையும் மீறி, தமிழர்களுடைய பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நேற்றுக்காலை புத்தர்சிலைகள் வைக்கப்பட் டுள்ளன.** »15

இலங்கைக் கிரிக்கெட்:

## விளையாட்டுத்துறை அமைச்சர் ஜனாதிபதி ரணில் முரண்பாடு

கொழும்பு, நவ. 7
இலங்கைக் கிரிக்கெட்டுக்கான இடைக்கால குழு நியமனம் தொடர்பில் அரசாங்கத்துக்கோ அல்லது தமக்கோ எதுவும் தெரியாது என ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். »15



## ரணிலால் குழு நியமனம்

கொழும்பு, நவ. 7
இலங்கை கிரிக்கெட் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அமைச்சரவை உப குழுவொன்றை நியமித் துள்ளார். அமைச்சரவைக் கூட்டம் »15

## 2024 பட்ஜெட்டில் 237 பில்லியன் ரூபா கல்விக்கு ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 7
2024ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு - செல வுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்காக 237 பில் லியன்ரூபாநிதி ஒதுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜ யந்த தெரிவித்தார். »15

## தவறான முடிவெடுத்த குடும்பத்தலைவர் சாவு!

பருத்தித்துறை, நவ. 7
வடமராட்சி கிழக்கு, மணற்காட்டுப் பகுதியில் தவறான முடிவு எடுத்த குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
குறித்த குடும்பத்தலைவர் கடந்த 4 ஆம் திகதி முரண்பாடு காரணமாக வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ளார். அவருடைய மகளின் வீட்டுக்குச் சென்று அங்கு தவறான முடிவு எடுத்து உயிர் மாய்க்க முற்பட்ட நிலையில் காப்பாற்றப் »15

## யாழ்ப்பாணக் கரையோரத்தை நோட்டம்விட்டார் சீனத்தூதுவர்

யாழ்ப்பாணம், நவ. 7
யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த சீனத் தூதுக் குழு பல்வேறு பகுதிகளையும் சென்று பார்வையிட்டுள்ளது.
நேற்று முற்பகல் 11.30 மணிக்கு பருத்தித்துறை - சக்கோட்டை முனைக்கு சீனத் தூதுவர் சென் றார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது சக் கோட்டை முனையை அவர் சென்று பார்வை யிட்டிருந்தார். அதனை இந்தப் பயணத்தின் போதும் நினைவுகூர்ந்தார். »15

## தவறான முடிவெடுத்து இளம்பெண் உயிரிழப்பு

சாவகச்சேரி, நவ. 7
தவறான முடிவெடுத்த 27 வயதான இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 4ஆம் திகதி இளம் பெண் தவ றான முடிவு எடுத்து உயிர்மாய்க்க முற்பட்டுள் ளார். இருப்பினும் உறவினர்களால் காப்பாற்றப் பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவ »15

சீனாவிலிருந்து மீன் இறக்குமதி:

## பொய் சொல்வது யார்? டக்ளஸா? சீனத்தூதுவரா?

யாழ்ப்பாணம், நவ. 7
இலங்கையில் பிடிக்கப்படாத அல்லது மிக அரி தான மீன் இனங்களை மாத்திரமே சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளதாகக் கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 25ஆம் திகதி தெரிவித்திருந்த நிலையில் சீனா விலிருந்து கடலுணவுகள் இலங்கைக்கு »15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரம்பரை அரசியல் மாற்றம் நாட்டில் எழுச்சிக்குப் பாதை!

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 7**

**இலங்கை பொருளாதாரத்தில் இருந்தும் அரசியலில் இருந்தும் மீட்சி பெற வேண்டுமாயின், பரம்பரை பரம்பரையாகச் செய்யும் அரசியலை இல்லாமற்செய்யவேண்டும். அரசியலில் புதிய கலாசாரம் உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க. சம்மாந்துறையில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் பொருள்கள், சேவைகளின் விலைகளை உயர்த்துகின்றது. ஆனால், உற்பத்தியை மேற்கொள்ள எதுவும் செய்யவில்லை. கடந்த 3 ஆண்டுகளாகத் தொழில் வாய்ப்புகள் வழங்கவில்லை. தொழில் வழங்கினால் சம்பளம் வழங்க அரசாங்கத்திடம் பணம் இல்லை. மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கல்விமான்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். அதனால் எம்மால் சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படுகின்றது. அரசதரப்பினர் வாக்குறுதிகளைத் தந்தாலும், அவற்றை நிறைவேற்றுவதற்குரிய நிதி எவரிடமும் இல்லை. இதிலிருந்து மீளவேண்டும். அதனால் படித்தவர்கள் அனைவரும் இணைந்து 2025ஆம் ஆண்டு முதல் 2028ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் நாட்டை பழைய நிலைமைக்குக் கொண்டு வரமுடியும் என்ற திட்டத்தை முன்வைத்துள்ளோம். கொரியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் முன்னேற்றமடைந்தமைக்கான காரணத்தை ஆராயவேண்டும். அவர்கள் பொருள்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதைவிடவும் டிஜிற்றல் சேவையை அனுப்புவதன் ஊடாகவே முன்னேற்றமடைந்தனர், நாம் ஒன்றுபட வேண்டும். பரம்பரையாகச் செய்யும் அரசியலை மாற்ற வேண்டும். தந்தைக்குப் பின் மகன், தாய்க்குப் பின் மகள் என்ற அரசியல் நிலைப்பாட்டை மாற்றவேண்டும். திறமைக்கு முதலிடம் அளிக்கும் அரசியல் சூழலை உருவாக்க வேண்டும் - என்றார். (எ-இ)



# உலருணவுப் பொதிகள் வழங்கிய தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

யாழ்ப்பாணம், நவ.7

பொருளாதாரரீதியாக மிகவும் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கு உதவி வழங்கும் வகையில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நடைமுறைப்படுத்தும் 'அற்றார் அழி பசி தீர்த்தல்' என்ற திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், அரியாலையில் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

பொருளாதார ரீதியான வருவாயைத் தேடித்தரவல்ல கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும்பொருட்டு அனைவருக்கும் கறுவா மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (எ-27)

# அநுரகுமாரவுக்கு 46 வீத ஆதரவாம்

கொழும்பு, நவ. 7

**தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இலங்கையில் 46 வீத வாக்காளர்களின் ஆதரவு உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரியவந்துள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்துக்கு 17 வீத ஆதரவு மாத்திரமே உள்ளது. எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு 29 வீதமான ஆதரவு உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

# ராஜபக்சக்களால்தான் இன்று அதீத வரிகள்

## மைத்திரி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 7

**ராஜபக்சக்களால்தான் இன்று மக்கள் மீது இத்தனை வரிச்சுமைகள் திணிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களே நாட்டை நாசம் செய்துவிட்டு பாதியில் ஓடிவிட்டார்கள் - இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் வருடம் தேர்தல் காலம். ஆகவே மக்களுக்காகச் சேவை செய்கின்ற உண்மையாக உழைக்கக் கூடிய மக்கள் பிரதிநிதியை உருவாக்கவேண்டும்.

கடந்த எனது ஆட்சிக் காலத்தின்போது விலைவாசி உயரவில்லை. நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ்த்தார்கள். என்னை பிழையானவராகக் காட்டி ஆட்சிக்கு வந்தவர்கள் பாதியிலே நாட்டை நாசம் செய்து விட்டு ஓடிவிட்டார்கள் - என்றார். (ம)

# உடன் நடைமுறைப்படுத்துமாறு ரணிலிடம் 4 கோரிக்கை!

## முன்வைத்தது பெரமுன

கொழும்பு, நவ. 7

**உடன் நடைமுறைப்படுத்துமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நான்கு விசேட கோரிக்கைகளை முன்வைத்துள்ளது பொதுஜன பெரமுன.**

கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி சமுர்த்தி நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்குதல், உரமானியத்தை தொடர்ந்தும் வழங்குதல், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை மீள வழங்குதல், அரச நிறுவன மறுசீரமைப்பின்போது வேலை இழப்பு இடம்பெறக்கூடாது என்பதே அந்த நான்கு கோரிக்கைகளாகும்.

நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கான சிறந்த பொறிமுறை சமுர்த்தி இயக்கம் எனவும், எனவே இயக்கத்தின் பெயரை மாற்றுவது பொருத்தமானதல்ல எனவும் பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. (ம-44)

# அமெ.குடியுரிமையை துறந்து களமிறங்குக

## பஸிலுக்கு பெரமுன 'அட்வைஸ்'

கொழும்பு, நவ. 7

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்காக அமெரிக்க குடியுரிமையைத் துறக்குமாறு கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்சவிடம் மொட்டுக்கட்சி மூத்த உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

ஜே.வி.பி., ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஜனாதிபதி வேட்பாளர் பெயரை அறிவித்துள்ளன. தமது கட்சி வேட்பாளரை இன்னும் அறிவிக்காமல் இருப்பது கட்சிக்கு அரசியல் ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும்.

அந்தவகையில் பஸில் ராஜபக்சவின் பெயரை அறிவிக்க வேண்டும். தேர்தலில் போட்டியிடுவதற்காக அவர் இரட்டைக் குடியுரிமையைத் துறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அறிவுறுத்தி வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

# மீண்டும் ஒரு ஆய்வுக் கப்பல் அனுமதி கோரியது சீனா

கொழும்பு, நவ.7

மற்றுமொரு சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி கோரியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பல் 2024 ஆம் ஆண்டு முதல் பகுதியில் இலங்கைக்கு பயணம் வரவுள்ளது என்று கூறப்படுகின்றது.

சீன ஆய்வுக் கப்பல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும், இந்தக் கப்பலுக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தவிடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் எந்தவொரு அறிவிப்பையும் விடுக்கவில்லை.

கடந்த 14 மாதங்களில் இரண்டு ஆய்வுக் கப்பல்களை சீனா இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

சீனக் கப்பல்களின் வருகை தொடர்பாக இந்தியாவால் தொடர்ந்தும் பாதுகாப்புக் கரிசனை எழுப்பப்பட்டுவரும் நிலையில், கப்பல் வருகைக்காக மீண்டும் சீனா அனுமதி கோரியுள்ளது. அதேவேளை, சீனாவின் கோரிக்கை குறித்து தமக்குத் தெரியாது என வெளிவிவாகர அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கபில பொன்சேகா தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய குருதி மையத்திலிருந்து

# மருந்து உற்பத்திக்கு மோசடியாகக் குருதி

## சுகாதார நிபுணர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 7

**சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுலின் மருந்து உற்பத்திக்குப் பயன் படுத்தப்பட்ட குருதி தேசிய குருதி மையத்தில் இருந்து பெறப்பட்டுள் ளது என்று தகவல் கிடைத்துள்ளது என சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கல்வி ஆராய்ச்சிக்கு குருதி தேவை என ஒப்புதல் பெறப்பட்ட காரணத்தால் குருதியைப் பெற்றுக் கொள்ள சுகாதாரப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார் என்று சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இம்யூனோகுளோபுலின் தடுப்பு மருந்தை செலுத்தியதன் பின்னர் நோயாளிகள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டனர் என்று குற்றச்சாட்டு அண்மைக் காலங்களில் பல மருத்துவமனைகளில் பதிவாகியிருந்தன.

சுகாதார அமைச்சு மற்றும் மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபைக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் பின்னணியில், மருந்தை இறக்குமதி செய்த நிறுவனத்தின் உரிமையாளர் அண்மையில் கைது செய்யப்பட்டார். இந்தத் தடுப்பு மருந்து கையிருப்பு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்பட்டாலும், அவை இந்த நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். (எ-இ)

# ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கு இடைக்கால நிர்வாகக் குழு!

கொழும்பு, நவ. 7

ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் பதிவு இடைநிறுத்தம் மற்றும் இடைக்கால நிர்வாகக்குழு நியமனம் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவின் தலைமையிலான ஏழு பேர் கொண்ட இடைக்கால நிர்வாகக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் தொடர்பிலான விசேட கணக்காய்வு அறிக்கையின் மூலம் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிர்வாகத்தின் ஊழல்கள், முறைகேடுகள் மற்றும் கடமைகள் பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியமை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டது. இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதால் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் பதிவை இடைநிறுத்தி, புதிய இடைக்கால நிர்வாகக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)



# மணல் கடத்தலில் ஈடுபட்டோர் பொலிஸாரைக் கண்டு ஓட்டம்!

## வீதியில் கொட்டப்பட்டது மணல்

யாழ்ப்பாணம், நவ. 7

டிப்பரில் மணலைக் கடத்தியவர்கள், பொலிஸாரைக் கண்டதும் வீதியில் மணலைக் கொட்டிவிட்டுத் தப்பியோடியுள்ளனர். டிப்பர் மோதி வீதியில் தொலைத்தொடர்புக் கம்பங்களும் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியின் சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீதியில் கொட்டப்பட்ட மணலை பொதுமக்கள் பலரும் வீடுகளுக்கு அள்ளிச் சென்றனர். (ம-26-27)

# இன, மத வேறுபாட்டை களைந்து செயற்படுக!

## கிரிக்கெட் தொடர்பில் சஜித் கருத்து

கொழும்பு, நவ. 7

சம்பியன் பட்டம் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணியால், ஊழல் காரணமாகவே இந்த முறை உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறமுடியாதுபோனது. இலங்கை அணியும் இவ்வாறானதொரு நிலைக்குச் சென்றுவிடக்கூடாது. இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி தகுதியானவர்கள், திறமையானவர்கள் கிரிக்கெட் நிர்வாகத்தில் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும் - இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிரிக்கெட் விளையாட்டு இன்று சக்தி வாய்ந்தவர்களின் ஆடுகளமாக மாறி, பணம், கப்பம், அரசியல் மயமாக்கல் போன்றவற்றின் மூலம் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதால் அது வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு தற்காலிக தீர்வுகள் தேவையில்லை. நிலையான நீண்டகால தீர்வுகள் அவசியம். ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் பிழைப்புக்காக அமைச்சரவையை பொய்யாக மாற்றுவது போன்ற பொய்யான சூழ்ச்சிகளால் கிரிக்கெட் நிறுவனத்தில் அங்கத்தவர்களை மாற்றி கிரிக்கெட்டை காப்பாற்றமுடியாது. இந்தத் திருத்தங்கள் உண்மையாகவும், யதார்த்தமாகவும், நடைமுறைரீதியாகவும் செயற்படுத்தப்படவேண்டும். எந்தவொரு அரசியல்வாதியும் எந்த விளையாட்டுச் சங்கத்திலும் பதவிகளை வகிக்க அனுமதிக்கக் கூடாது. தொழில்முறை விளையாட்டுகளில் ஈடுபட்டு வென்ற வீரர்களுக்கு விளையாட்டுத்துறை நிர்வாகம் ஒப்படைக்கப்படவேண்டும். திறமையான வீரர்களை ஒதுக்கிவைத்துவிட்டு, முதலாளிகளின் அரசியல் பலத்தினாலும், சதி பலத்தினாலும் விளையாட்டானது பாழாகியுள்ள நிலையில், தற்காலிக தீர்வில்லாத நிரந்தரத் தீர்வே தேவையாகவுள்ளது - என்றார். (எ-44)

# புதினம் தெரியுமோ?

திரும்பவும் கொழும்பில அரசியல் குழப்பங்கள் அமளிதுமளியா நடக்கத் தொடங்கிட்டுது. இவ்வளவு நாளிலும் ரணிலை தங்கட உள்ளங்கையில வைச்சு காப்பாத்தின மொட்டுக்கட்சிக்கு, இப்ப அவரோட கடும் முட்டுமோதல் தொடங்கிட்டுது. எல்லாம் உந்த அமைச்சரவை மாற்றத்தாலதான். தாங்கள் சொன்ன ஆக்களுக்கு இன்னும் அமைச்சுப் பதவியைக் குடுக்காமல் சும்மாயிருந்த சுதந்திரக் கட்சிக்காரரை அமைச்சராக்கினால் மொட்டுக்காரருக்கு எரியத்தானே செய்யும். அந்தக் கடுப்பைத்தான் ரணிலில காட்டத் தொடங்கியிருக்கினம். முக்கியமா பட்ஜெட்டை வைச்சுத்தான் ரணிலுக்கு ஆட்டம் காட்டப் பாக்கினம். ரணிலுக்கும் இதெல்லாம் தெரியும். ஆனாலும் இப்பிடி தனக்கெதிரா மொட்டுக்காரர் எல்லா இடத்திலையும் குறைசொல்லிக்கொண்டு திரியினம் எண்டதை ரணில் வெளியில காட்டிக்கொள்ளவேயில்லை. அதுக்காக ரணில் சும்மா இருக்கிறார் எண்டில்லை. மொட்டுக் கட்சிக்குள்ள இருந்து தன்ர பக்கம் வரக்கூடிய ஆக்களுக்கு கடுமையாத் தூண்டிலைப் போட்டபடிதான் ஆள் இருக்குதாம்.

அமைச்சரவை மாற்றப் பிரச்சினை அப்பிடியே அமந்துபோடுமெண்டு ரணில் கணக்குப் போட, திடீரெண்டு இலங்கைக் கிரிக்கெட் ரீம் இந்தியாவோட கேவலமாகத் தோத்ததால கிரிக்கெட் சபையைக் கலைச்சுப் போட்டு, கிரிக்கெட் ரீமின்ர முந்தின கப்டன் அர்ஜுன் ரணதுங்க தலைமையில ஒரு இடைக்கால சபையை விளையாட்டுத்துறை அமைச்சர் புதிசாப் போட்டிருக்கிறார். ஆனால் என்ன பிரச்சினை எண்டால் முறைப்படி இதை ரணிலுக்கு அறிவிச்சு, அவர் தான் இதைப்பற்றி அறிவித்தல் விட்டிருக்க வேணும். ஆனால் மொட்டுக் கட்சியின்ர எம்.பி. தானே எண்ட நினைப்பில விளையாட்டுத் துறை அமைச்சர் அதிரடியா எடுத்த முடிவு இப்ப அவருக்கே வினையா வந்திருக்குதாம்.

அமைச்சரால நிப்பாட்டுப்பட்ட கிரிக்கெட் சபைக்காரரில சிலர் ரணிலுக்கு வேண்டப்பட்டவையாம். அவை தங்களை பதவியைப் பிடுங்கிக்கொண்டு அமைச்சர் கலைச்சுப் போட்டாரெண்ட கோபத்தில, அமைச்சரைப் பற்றி ரணிலிட்ட எவ்வளவு கோள்மூட்ட ஏலுமோ அந்தளவுக்கு பத்தவைச்சிருக்கினம். அதைக் கேட்ட ரணில் 'என்னை மீறி அவரென்னெண்டு அப்பிடி ஒரு சபையை இடைக்காலத்துக்கு நியமிக்கலாம்' எண்டு துள்ளிக்குதிச்சுப் போட்டு, இப்ப இதுகளைப் பற்றியும், கிரிக்கெட் ரீமைப் பற்றியும் விசாரிக்க தனியா ஒரு குழுவை அமைச்சிருக்கிறார். அதோட விளையாட்டுத்துறை அமைச்சரும் தான் ரீமின்ர தோல்விக்கு பொறுப்பு எண்டு சொல்லி, அவரையும் வீட்டை அனுப்பிறதுதான் ரணிலின்ர திட்டமாம். இப்பிடி ஆளுக்காள் குழிபறிக்கிறதிலையே குறியா இருந்தால் , என்னெண்டு நாடு உருப்படும்? இலங்கை ரீம் எப்பிடி முந்தினமாதிரி விளையாடும்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா மருத்துவமனையருகே வடிகாலில் நுளம்புப்பெருக்கம்



## நோயாளர்கள் அவதி நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**யாழ்ப்பாணம், நவ. 7**

**யாழ்.போதனா மருத்துவமனையின் கிழக்குப்புறமாகவுள்ள வடிகால்வாய் துப்புரவு செய்யப்படாது புதர்கள் மண்டிக்காணப்படுவதால் நுளம்புப்பெருக்கம் அதிகரித்துள்ளது என்று மருத்துவமனைக்கு வருகைதரும் நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் கூறுகையில்; யாழ்.போதனா மருத்துவமனையின் கிழக்குப்புறமாகவுள்ள வடிகால்வாய் துப்புரவு செய்யப்படாதுள்ளது. இந்தப் பகுதிக்கருகே மருத்துவமனையின் நோயாளர்பிரிவு, தாதியர் பயிற்சிப்பிரிவு, மருத்துவர்கள் தங்குமிடம் உள்ளிட்டவை காணப்படுகின்றன.

குறித்த வடிகால்வாய் சீரின்மையால் மருத்துவமனைக்கு வருகைதரும் நோயாளர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் நோய்நொடிகளுக்குள்ளாக வேண்டிய நிலை உருவாகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி வடிகால்வாயை துப்புரவு செய்து நுளம்புப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச)

# கட்டுப்பாட்டு விலையைமீறி சீனி விற்றால் கைது!

கொழும்பு, நவ. 7

நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையைவிட சீனியை அதிக விலைக்கு விற்பனைசெய்யும் வர்த்தகர்களை உடன் கைதுசெய்ய நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இன்று முதல் இந்தச் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் நுகர்வோர் அதிகாரசபை மேலும் குறிப்பிட்டது. (ச-இ)



# தாதியர்கள் வலைப்பந்து யாழ்.போதனா முதலிடம்!

யாழ்ப்பாணம், நவ. 7

அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட தாதியர்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.போதனா மருத்துவமனை அணி தேசியத்தில் முதலிடம் பெற்றுள்ளது.

தாதியர் சங்கத்தால் இந்தப்போட்டி அண்மையில் நடத்தப்பட்டது. இதில் யாழ்.போதனா மருத்துவமனை வலைப்பந்தாட்ட அணி பங்கேற்று வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கியது.

அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. (ச-100)



# சீரமைப்புச் செய்யப்படாமல் கரவெட்டி சாமியன் வீதி

யாழ்ப்பாணம், நவ. 7

வடமராட்சி, கரவெட்டி சாமியன் அரசடி சந்தியில் இருந்து தெற்குநோக்கி சோனப்பு மயான வெளிக்குச் செல்லும் சுமார் ஒரு கிலோமீற்றர் நீளமுடைய வீதி நீண்டகாலமாகச் செப்பனிடப்படாமல் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த வீதியில் இரு மருத்துவமனைகள் இருக்கின்றன. பாடசாலைகளுக்கும் தச்சன்தோப்பு, சிந்தாமணி விநாயகர் ஆலயத்துக்கும் இந்த வீதியூடாகவே செல்லவேண்டும்.

கோடை காலத்திலேயே மோசமான நிலையில் காணப்படும் இந்த வீதியில் மாரிகாலத்தில் மக்கள் அறவே பயணம் செய்யமுடியாத அளவுக்கு வெள்ளநீர் தேங்கிக் காணப்படுகிறது.

எனவே இந்த வீதியை உரிய முறையில் சீரமைத்து மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்றதாக மாற்றித்தரவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

# நீண்டகால சீரமைப்பின்றி சரசாலை - வில்சன் வீதி!

## செப்பனிட்டுத் தருமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 7

நீண்டகாலமாக புனரமைப்பின்றி போக்குவரத்துச் செய்யமுடியாத வகையில் சேதமடைந்து காணப்படும் சரசாலை - வில்சன் வாசிகசாலை வீதியை புனரமைத்துத் தாருங்கள் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; இந்த வீதி நீண்டகாலமாக செப்பனிடப்படாமையால் தற்போது பெரும் சேதங்களுக்குள்ளாகி மக்கள் பயணிக்கவே முடியாதவாறு காணப்படுகிறது. சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டமைந்த இந்தவீதி மட்டுவில்கிழக்கு தேவாலய வீதியையும் ஞானதீபம் விளையாட்டு மைதான வீதியையும் இணைக்கும் பிரதான வீதியாகும்.

இந்த வீதியை பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், முதியோர்கள் என அதிகளவானோர் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் முன்வந்து நீண்டகாலமாகப் புனரமைப்பு செய்யப்படாத இந்த வீதியை செப்பனிட நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-131)



சுதுமலைதெற்கு மற்றும் மாதகல் தெற்குப் பகுதிகளில் பனம் விதைகளை நடுகை செய்யும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ச-66)

# பச்சிலைப்பள்ளியில் தொழில் வழிகாட்டல்

கிளிநொச்சி, நவ. 7

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஏற்பாட்டில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான எதிர்கால தொழில் வழிகாட்டல் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்டச் செயலகத்தின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அலகின் அதிகாரி க.கோடீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சிவசொரூபன், நைற்றா பரிசோதகர் செ.கிரிசாந் மற்றும் அலுவலகத் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கேற்றனர். (ச-9)





பெற்றோர், மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஊரெழு கணேச வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்றது. இதில் விசேட கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பி.சுரேந்திரன் பங்கேற்று 'மாணவர்களும் சமகால சவால்களும்' எனும் தலைப்பில் உரையாற்றினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரி - 200 கல்விக்கண்காட்சி கோலாகலம்





யாழ்ப்பாணம், நவ. 7

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்விக் கண்காட்சி கடந்த வாரம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

மாணவர்களின் பாடத்திட்டத்துக்கமைவாக அனைத்து பாடத்திட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி இந்தக் கண்காட்சி முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் சாரணர் குழுவினரால் கல்லூரியின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு 2016ஆம் ஆண்டு வெளியான 'தடை தகர்' குறுந்திரைப்படமும் வெளியிடப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் கல்வித்துறைசார் அதிகாரிகள், அயற்பாடசாலை அதிபர்கள், பாடாசாலை அதிபர், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-125)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொதுநூலகமும் ஸ்ரீலங்கா புத்தகசாலையும் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் பொதுநூலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பல்வேறு தரப்பினர் பங்கேற்றனர். (ச-66)





வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஊரெழு கணேச வித்தியாசாலையின் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு வலி. கிழக்கு பிரதேசசபையின் உரும்பிராய் உபஅலுவலகத்தால் வர்ணம்பூசுதல், சொல் ஆக்கம், நுண்ணறிவு, விரைவு கணிதம் முதலிய போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன. (ச)



சுவிஸ் நாட்டில் வசிக்கும் த.தர்மகுலசிங்கத்தின் நிதியனுசரணையில் அமரர் தெய்வானைப் பிள்ளை தம்பிஐயா ஞாபகார்த்தமாக கைதடி குருசாமி வித்தியாலயத்துக்கு இவ்வாண்டுக்கான கல்வி ஊக்குவிப்பு நிதி முதற்கட்டமாக வழங்கிவைக்கப்பட்டது. (ச-ரி-159)



# விவசாயக் கழக மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாணம், மயிலணி சைவ வித்தியாலயத்தில் சிறப்பான முறையில் தொழில் முனைவுடன் கூடிய பாடசாலைத் தோட்டமுயற்சியில் ஈடுபட்டு, மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற விவசாயக் கண்காட்சியின்போது பரிசில் பெற்ற, பாடசாலையின் விவசாயக் கழக மாணவர்கள் மயிலணி சைவ வித்தியாலய சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வுக்கு வலிகாமம் கல்வி வலய விவசாயப் பாட ஆசிரிய ஆலோசகர் ப.அருந்தவம் விருந்தினராகக் கலந்துகொண்டார். (ம-20)



வேவில் விக்கினேஸ்வரா சனசமூக நிலைய வாணிவிழா சனசமூக நிலையத் தலைவர் த.ஸ்ரீதர்சன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக பல்நோக்கு அபிவிருத்திச் செயலணி திணைக்கள மாவட்ட இணைப்பாளர் நவரட்ணம் மயூரரூபன் பங்கேற்றார். (ச)



புலம்பெயர் சமூக சேவையாளர் ஒருவரின் நிதிப்பங்களிப்பில் மன்னார் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் மடுக்கரை பாடசாலைக்கு புதிய வகுப்பறைக் கட்டடமொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற திறப்புவிழாவில் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் தேவதயாளி பங்கேற்று கட்டடத்தை திறந்துவைத்தார். (ச-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுரத்தில் தொடரும் கால்நடை திருட்டுகள்!

## நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, நவ. 7**

**கிளிநொச்சி, கனகபுரத்தில் தொடர்ச்சியாகக் கால்நடைகள் திருடப்படுகின்றன என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் கால்நடைகள் திருடப்பட்டு, பராமரிப்பற்ற காணிகளுக்குள் வைத்து இறைச்சியாக்கப்படுகின்றன. அதேவேளை, பகல் வேளைகளில் கத்தி முனையில் வழிப்பறியில் ஈடுபடும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இவ்வாறான சம்பவங்களால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-214)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. தம்பு ஸ்ரீகரன்**
B.Com (Acc.Spl)
HNDM, PGDE



**திருமதி சோபியாலினி எட்வின்ராஜ்குமார்**
BFA, HNDET,Special Trained (Eng)
PGDE, MED - Read

**இலங்கை அதிபர் சேவை III நியமனத்தை 04.11.2023 அன்று பெற்ற எமது பாடசாலை ஆசிரியப் பெருந்தகைகளான திரு.தம்பு ஸ்ரீகரன், திருமதி சோபியாலினி எட்வின்ராஜ்குமார்** ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவிகளை பெற்று சேவையில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்

**வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.**

(cs 20032) 4 x 10 N4


# மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 05 . 1958

இறப்பு 04 . 11 . 2023

## திருமதி இந்திரகுமார் செல்வராணி

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கில்னர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரகுமார் செல்வராணி கடந்த (04.11.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற சண்முகராஜ கைலாசபதி தம்பதியரின் மருமகளும், கார்த்திகேயன், கபிலேஸ்வரன், ஜெயகௌரி (கனடா), கௌசல்யா (லண்டன்), கௌதமி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனுஜா, சாருலதா, மகேஷன் (கனடா), திபாகரன் (லண்டன்), சதேசன்னா (ஸ்டூடியோ சிறி நதியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் முருகையா, கமலாதேவி, கிருஸ்ணராணி, இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கைலாஷிகா, அஜேந்திரா, யாத்திரா, சாயிரா, சாயினி, ஆத்விகா, அனிஷன், அக்ஷரா, துஷாரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.11.2023) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 9.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**"செல்வ இந்திர பிரஸ்தம்"**
**157/8, கில்னர் லேன்,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**ச.இந்திரகுமார்**
**(உரிமையாளர் உமா களஞ்சியம்)**
**மக்கள், மருமக்கள்.**

## 'ரி.பி.ஹன்ற்' ஓவியக்கூட கலைப்போட்டி பரிசளிப்பு

சாவகச்சேரி ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடம் வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட கலைப்போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு ஓவிய கூட வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், கௌரவ விருந்தினர்களாக சிவபூமி நிலையத் தலைவர் ஆறு. திருமுருகன், அமெரிக்கன் சிலோன் தேவாலய தலைவர் தேவகுணானந்தன் அடிகளார், யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செனரத், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மனோகர், விரிவுரையாளர் பிரசாந், வடமராட்சி வலயக்கல்வி அலுவலக அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆரியதாஸ் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ச-27-131)




# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முக்கியமான பிரமுகர்களை சந்திப்பீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் புது அனுபவம் உண்டாகும். தொழிலில் இலாபம் அதிகரிக்கும்.

**இடபம்:** குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். அரசால்ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மிதுனம்:** கணவன்-மனைவிக்குள் அன்யோன்னியம் பிறக்கும். தள்ளிப்போன விஷயங்கள் உடனே முடியும். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும்.

**கடகம்:** இராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**சிம்மம்:** எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள்கூட இழுபறியில் போய்முடியும். சிலர் உங்களைத் தாழ்த்தி பேசினாலும் கலங்காதீர்கள். சகோதரர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கன்னி:** உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் உள்ள பிரச்சினை தீரும். வியாபாரத்தில் புதுத்தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**துலாம்:** மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களை எல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**விருச்சிகம்:** உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும்.

**தனுசு:** சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.

**மகரம்:** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துகொள்வீர்கள்.

**கும்பம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வழக்குகளில் சாதகமாக தீர்ப்பு வரும்.

**மீனம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தமிழர்களின் வெளியுறவுக் கொள்கைகள்

ஹமாஸுக்கு எதிரான போரின் நீட்சியாக, காஸாவில் இஸ்ரேலின் கொடிய தாண்டவம் எல்லையற்றுத் தொடர்ந்து வருகின்றது. இஸ்ரேலின் கொலைப்படைகள் காஸாவைச் சூழ்ந்துள்ளன. காஸாவினதும் பலஸ்தீனர்களதும் நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில், பலஸ்தீன அதிபர் அப்பாஸை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் பிளிங்கன்.

மத்திய கிழக்கில் இஸ்ரேல் கட்டற்ற குதிரையாக ஓடுகின்றது என்றால் அடக்கிவிட முடியாத இமாலய பலத்துடன் இருக்கின்றது என்றால் அதன்பின்னணி அமெரிக்காவே. அமெரிக்காவும் அதன் இராணுவ தொழில்நுட்ப உதவிகளும்தான் இஸ்ரேலின் முதுகெலும்பு. ஆதலால், பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொள்ளும் 'இனப்படுகொலையின்' பின்னணியில் இருப்பது அமெரிக்காதான் என்று சொன்னால்கூட அது ஒருவகையில் பொருத்தமானதாகவே இருக்கும். அமெரிக்காவின் உதவிகள் ஈரான், துருக்கி, சிரியா, ஈராக், எகிப்து என்று இஸ்ரேலைச் சூழ்ந்திருக்கும் அதன் பரம வைரிகளுக்கு எதிராகவே என்றாலும், இந்த உதவிகள் இப்போது அதிகம் பயன்படுத்தப்படுவது அப்பாவிப் பலஸ்தீனர்களுக்கு எதிராகத்தான். ஆதலால் இந்தக் கொலைப்பழியில் அமெரிக்கக் கரங்களும் குருதிக்கறை படிந்தனவே. இந்தக் கரங்களுடன்தான் அப்பாஸைச் சந்தித்துக் 'கைகுலுக்கியுள்ளார்' பிளிங்கன். பலஸ்தீனர்களை ஒருமுனையில் கொன்று தள்ளி மறுமுனையில் அவர்களின் 'ஜனநாயகத் தலைவர்களுடன்' கைகுலுக்குவதைவிடவும் உச்சபட்ச இராஜதந்திரம் என எதைத்தான் எண்பிக்க முடியும். 'பலஸ்தீனர்கள் காஸாவில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படக்கூடாது' என்று அப்பாஸிடம் தெரிவித்துள்ளார் பிளிங்கன். பிளிங்கனின் இந்தக் கருத்து, காஸாவிலிருந்து பலஸ்தீனர்களை வெளியேற்றி அதன் ஒருபகுதியை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற இஸ்ரேலின் 'நிகழ் மனநிலைக்கு' முற்றிலும் முரணானகூற்று. இங்கேதான் இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையிலான தன் உறவை இராஜதந்திரத்தை ஒரு மெல்லிய கோட்டால் வரைந்திருக்கின்றது அமெரிக்கா.

இராஜதந்திரம் என்பது இதுதான். எமக்குத் தேவையான ஒன்றை அடைவதற்காக எம் அபிலாஷைகளை எட்டிக் கொள்வதற்காக ஒன்றைக் கைவிட்டு இன்னொன்றை 'ஒரு படர்கொடி போன்று' இறுகப்பற்றித் 'தங்கியிருத்தல்' அல்ல. ஒரு தரப்பைக் குளிர்விப்பதற்காக பிறிதொரு தரப்புக்கு எதிரான கோள்மூட்டும் வேலைகளைச் செய்வதுமல்ல, அது ஒரு கலை. இந்தக் கலையைத்தான் தமிழ்த் தேசியக் கட்சிகளும் அதன் தலைவர்களும் அவசரமாகவும் அவசியமாகவும் கற்க வேண்டியுள்ளது.

தமிழர்களின் ஈழப்போர் வரலாற்றில் இந்தியா கனதியான பங்கொன்றை வகித்தது என்பதையோ, தமிழர்களின் வேணவாக்களை அடைவதில் இந்தியா தவிர்க்கப்பட முடியாத வகிபாகத்தை ஆற்றுகின்றது என்பதையோ மறுப்பதற்கில்லை. ஆனால், இந்தியாவைக் குளிர்விக்க வேண்டும் என்பதற்காக சீனாவை எதிர்க்க வேண்டும் என்ற எந்த அவசியமும் தமிழ்த் தலைவர்களுக்கு இல்லை. அதே சமயம் சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் கடைக்கண் பார்வைக்காக இந்தியாவைத் தள்ளிவைக்கவேண்டிய தேவையும் இல்லை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இவ்வாறான நிலைப்பாட்தடைத்தான் மிழ்த் தலைவர்கள் அண்மைக்காலமாக தங்களின் பிரதான அரசியலாகக் கொண்டிருக்கின்றனர். 'சீனாவை எதிர்த்து இந்தியாவைத் திருப்திப்படுத்த வேண்டும்' என்பதில் அவர்கள் காட்டும் ஆர்வமும் தீவிரமும் தமிழ்மக்களின் நலனுக்கு அவ்வளவு உகந்ததல்ல. இந்தியாவும் வேண்டும், சீனாவும் வேண்டும் என்ற நிலையில் மெல்லிய கோட்டால் பிரிக்கப்பட்ட வெவ்வேறு கொள்கைகளை தமிழ்த் தேசியத் தலைவர்கள் வரித்துக்கொள்ளலே இந்தக்காலத்தின் தேவை.

வடமாகாண மரநடுகை மாதம் — நவம்பர் 2023



"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்.

-பிராங்க் லோயிட் றைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)



# நில விடுதலைக்கான போராட்டம் தொடரும்

## தமிழரசுக் கட்சித் தலைவர் தெரிவிப்பு



வவுனியா, நவ. 7

**வடக்கு- கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கெதிராகத் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து எதிர்ப்பை வெளிப்படுத்துவோம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

வவுனியால் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் பங்கேற்றபின் ஊடகங்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; வடக்கு-கிழக்கில் சிங்கள - பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழர்களது பூர்வீக நிலங்கள் வலிந்து ஆக்கிரமிப்புச்செய்வதுநிறுத்தப்படவேண்டும்.

கடந்த 70 வருடங்களாகத் தமிழ்மக்கள்இனத்தின் விடுதலைக்காக மட்டுமல்ல, நிலமானது பௌத்த-சிங்கள மயமாக்கல் ஆக்கப்படுவதற்கு எதிராகவும் போராடி வருகின்றனர்.

எமது நிலத்தை விடுவிப்பதற்கும் ஆக்கிரமிப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கும் எதிரான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இனவிடுதலைக்காகவும் நிலவிடுதலைக்காகவும் ஜனநாயக வழியிலான போராட்டங்களுக்கு நாம் தொடர்ந்து குரலெழுப்பு வதுடன் அரசுக்கெதிரான இந்தப் போராட்டங்கள் நிச்சயம் தொடரும் - என்றார். (ச-110)

## காஸாவில் தங்கியிருந்த 11 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, நவ. 7

இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக காஸா பகுதியில் சிக்கியிருந்த 11 இலங்கையர்களும் நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்கள். எகிப்தின் ரபா நுழைவாயில் ஊடாக அவர்கள் 11 பேரும் அண்மையில் மீட்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில், கட்டாரின் தோஹாவில் இருந்து விமானம் மூலம் நேற்றுமுன்தினம் அதிகாலை இவர்கள் அனைவரும் நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை - ஹமாஸின் தாக்குதல் காரணமாக இரண்டு இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த மாதம் ஏழாம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அனுலா ஜயத்திலக்க என்ற பெண் உயிரிழந்தார். ஹமாஸால் பணயக்கைதியாக பிடிக்கப்பட்டிருந்த இலங்கையர் ஒருவரும் கொல்லப்பட்டிருந்தார். (எ-இ)

நாளை 08.11.2023 புதன்கிழமை ஐப்பசி 22

சுபநேரம் :04.35 - 06.05

ராகுகாலம் : 12.05 - 01.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டுதலுக்கு அமைவாக காங்கேசன்துறை கடற்கரையில் அண்மையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-125)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.செல்வராசா மதனரூபன்
Primary Trained
SLPS-III



திரு.இராசரத்தினம் சத்தியேஸ்வரன்
B.A(Hons),M.A, PGDE,
Dip.in.Counselling, SLPS-III



திரு.மோசஸ் ஷாந்தன் சத்தியகீர்த்தி
BFA, PGDE, Dipn.in
Community Development &
Management.
Certificate in Human Rights,
M.A.(Gandhian Thought)
M.Ed (2nd upper) SLPS-III

Congratulations

எமது பாடசாலையில் கடமையாற்றும் மேற்படி ஆசிரியர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் - III இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவர்களை மனதாரப் பாராட்டுவதுடன், அவர்கள் பணி மென்மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்.

(CS 52775) A-1

# பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் வடக்கில் அதிகரிப்பு

## அம்பிகா சற்குணநாதன் தெரிவிப்பு

வடக்கில் பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று மனித உரிமை செயற்பாட்டாளரான அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமூக மட்டத்தில் பல்வேறுபட்ட அமைப்புகள் வேலை செய்கின்றன. அவை பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்துச்செல்கின்றன என்று குறிப்பிடுகின்றன. அதற்குக் காரணம் நாட்டில் சட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படாமையே - என்றார்.

இந்த நிகழ்வில் பெண்கள், சிறுவர்களுக்கான சட்ட விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன. கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சட்டவாளர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பலம் பொருந்திய பிணைப்பின்

# நிலையான வெற்றி

## கொமர்ஷல் வங்கி இலங்கையின் பலம் பொருந்திய வங்கியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது

அனைத்து விதமான சவால்களையும் வெற்றி கண்டு வலுவாகவும் நிலையானதாகவும் முன்னோக்கிச் செல்லும் வங்கியாக கொமர்ஷல் வங்கி, மிக உயர்ந்த நிதி நிலைத்தன்மை மற்றும் சிறந்த செயற்பாட்டுச் சிறப்பின் காரணமாக மீண்டும் 2023 இல் ஏசியன் பேங்கர் சஞ்சிகையினால் இலங்கையின் பலம் பொருந்திய வங்கி என்ற விருதை பெறுவதற்கு பெருமிதம் கொள்வதோடு, எங்களுடன் உறுதுணையாக நின்ற எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றி கலந்த வணக்கங்களை சமர்ப்பிக்கின்றோம்.

அதிக விருதுகளை வென்ற இலங்கையின் வங்கி

COMMERCIAL BANK

உங்கள் நலனே எங்கள் நோக்கம்

Fitch Rating A (lka) | +94 112 353 353 | www.combank.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலி, நாவலம்பதி பகுதியில் அமரத்துவம் அடைந்த அனித்திரன், மதனபாதம், தரணிகன் ஆகிய மூவரின் நினைவாக அவர்களின் நண்பர்களின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை அனுசரணையில் குருதிக்கொடை முகாம் அண்மையில் இடம்பெற்றது. (ச-23)

# 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 03 . 11 . 1938

மறைவு 20 . 10 . 2022



## அம்பலம் சிவயோகம்

திதி:- அபரபக்க தசமி

ஓராண்டு நகர்ந்தாலும் நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில் நிலைகுலைந்து போகின்றோம் அம்மா!
உங்களை நினைக்காத நொடிகளில்லை.

அன்பினால், பண்பினால், நட்பினால் ஆளுமையால்
எங்கள் அனைவரது உள்ளங்களில் குடியிருக்கும்
எம் அன்னையை நாம் என்றென்றும் நினைத்திருப்போம்.

அன்னையின் ஆத்மா இறைபாதம் சரணடைய பிரார்த்திப்போமாக...

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை வாதரவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் சமய நிகழ்வுடன் இடம்பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளவும்.

வாதரவத்தை,
புத்தூர்.

பெறாமகள்
பரமேஸ்வரநாதன் கனகேஸ்வரி

# சேவை நலன் பாராட்டு



## திருமதி சிவகருணாகரன் வசந்தகுமாரி

(ஆசிரியை)

மணிவிழா நாயகியே மகத்தான சேவகியே
மாண்புறு சேவைதனை மகிழ்வுடன் ஆற்றிவிட்டு
அகவை அறுபதில் ஓய்வுபெறும் நாயகியே
அன்புடன் அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
அகவை இருபத்தைந்தில் கவியாளன்
சிவகருணாகரனை கரம்பற்றி
அன்பாக ஆண் மகன் இருவரைப் பெற்றெடுத்து
அவனியிலே பெருமையுடன் வாழ வைத்தீர்
அர்ப்பணிப்புச் சேவையை இனிதாய் முடித்துவிட்டீர்.
பொங்கி எழாப் பேரலையே. பொறுமையில் பூமாதேவியே
குன்றிலிட்ட தீபமே உமை வாழ்த்தி விட
வார்த்தை இல்லை
ஓய்வது பெற்று விட்டாலும் ஓயாது உங்கள் பணி
வாழ்வது சிறந்து வளம் பல பெருகி
சீருடைய கணவன் சிறப்புடைய புதல்வர்கள்
மனம் நிறை மருமகள் மழலைகளுடன் இன்பம் பொங்க
இனிமையுடன் இங்கிதமாய் வாழ வாழ்த்துகின்றோம்.

முப்பத்து மூன்று ஆண்டுகள் கல்விப் பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும் ஆசிரியரின் ஓய்வுக்காலம் சமூகப்பணியிலும் கல்விப் பணியிலும். இல்லற வாழ்விலும் இன்பமாய் குதூகலமாய் அமைய மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

**சேவைக்காலம் 16.03.1990 - 07.11.2023**

கிளி/இயக்கச்சி மகா வித்தியாலயம் (16.03.1990-21.11.1991)
கிளி/முகாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (22.11.1991-08.05.1996)
கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை (09.05.1996-31.08.2000)
கிளி/ஸ்கந்தபுரம் இல.01. அ.த.க. பாடசாலை (01.09.2000 - 01.01.2002)
மு/புத்துக்குடியிருப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம் (02.01.2002 - 18.01.2004)
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் (19.01.2004 - 04.02.2015)
கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம் (05.02.2015 - 07.11.2023)

வாழ்த்துவோர்:-
பாடசாலைச் சமூகம்
கிளி / கிளிநொச்சி
இந்து ஆரம்ப வித்தியாலயம்

# மரண அறிவித்தல்

## கபிலசர்மா தர்ஷினி

பிறப்பு: 29.05.1996

இறப்பு: 06.11.2023

தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வறுத்தலை விளானை வசிப்பிடமாகவும் கொண்ட கபிலசர்மா தர்ஷினி அவர்கள் நேற்று (06.11.2023) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கபிலசர்மாவின் அன்பு மனைவியும், கிருஷ்ணஐயர் - பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மகளும், முருகானந்தசர்மா தனலஷ்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்பிரமணியக் குருக்கள் இராஜேஸ்வரி, பாலகிருஷ்ண குருக்கள் சாந்தினி, ஸ்ரீகாந்தன் பிரதாபன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சதானந்தசர்மாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.11.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பளை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு கொண்டுசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணகி அம்மன் கோயிலடி,
தென்மயிலை,
தெல்லிப்பளை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 584 8827

(CS268...)A-1

# மரண அறிவித்தல்



## தம்பையா சண்முகநாதன்

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும், டச்சுறோட், சண்டிலிப்பாயை (சங்குவேலி) வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சண்முகநாதன் அவர்கள் நேற்று (06.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் தம்பையா பசுபதியின் சிரேஷ்ட புதல்வனும், அமரர் பொன்னையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், பகீரதன் (ஜேர்மனி), பார்த்தீபன் (லண்டன்), பகீரதி (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), பவானி ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுசியா (ஜேர்மனி), பிரதீனா (லண்டன்), றமணன் (RDHS Office, Jaffna), பிரதீபன் (ஆசிரியர், யா/வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசோதிமணி, கணேசமூர்த்தி (ஜேர்மனி), அமரர் மகேஸ்வரன், விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), சிவஞானமலர் (ஜேர்மனி), அமரர் இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் தங்கரத்தினம், பூபாலசிங்கம், அமரர் திருபாலசிங்கம், அமரர் மங்கையர்க்கரசி, அமரர் சக்திவடிவேல், புஸ்பலீலாதேவி, மாணிக்க தியாகராஜா ஆகியோரின் மைத்துனரும், ஜந்தூரி, அபர்னா, கீரன், ஓவியன், அக்ஷரன், கணாதிபன், யுவாகன், சதுர்ஷி, சகிஸ்ணன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்குவேலி காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்.
021 225 6316

CR 40945 A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



மலர்வு
19 . 06 . 1966

உதிர்வு
04 . 11 . 2023

### குணதீஸ்வரன் ரஞ்சிதமலர்

சத்திரத்தை களபூமி காரைநகரை பிறப்பிடமாகவும் இல.33, சிவானந்த வீதி, கொழும்பு 13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குணதீஸ்வரன் ரஞ்சிதமலர் கடந்த (04.11.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் அன்னம்மா தம்பதியரின் மூத்தமகளும், குணதீஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், ரவிச்சந்திரன், ராசமலர், செல்வச்சந்திரன், இன்பமலர், உதயச்சந்திரன் ஆகியோரின் சகோதரியும், சேதுஸ்வரி, குகதாசன், ஜெயசங்கரி, அமுதா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு 09.11.2023 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடை பெற்று, பூதவுடலானது பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.33, சிவானந்த வீதி,**
**கொழும்பு- 13**
**தொடர்பு: 077 530 4170**

(cs26852) (N.1)

தகவல்:
**குடும்பத்தினர்**

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
19 . 01 . 1950

விண்ணில்
07 . 11 . 2012

### சவரிமுத்து தோமஸ்

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
(Rtd. Technicion Royal Airforce of Oman.)

இவ்வுலகில் இருந்த போதும்
எமக்காகவே வாழ்ந்தீர்கள்
இறந்த பின்பும் கூட எமக்காகத் தான்
இறைவனிடம் வேண்டுகின்றீர்கள்
என்பதை உணர்கின்றோம்.
உங்களால் தலைநிமிர்ந்த நாம்
என்றும் உங்களைத்
தலைகுனிய வைத்ததில்லை.

**நாவாந்துறை,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS26863) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
29 . 03 . 1957

மறைவு
05 . 11 . 2023

### வித்துவான் வீரமணி ஐயர் சுசிலாதேவி

நல்லூரைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வித்துவான் வீரமணி ஐயர் சுசிலாதேவி நேற்றுமுன்தினம் (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை இரவு இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசாமிக்குருக்கள் கமலாம்பிகையம்மா தம்பதியரின் அன்பு மகளும், நடேசசர்மா சுந்தராம்பாள் தம்பதியரின் பாசமிகு மருமகளும், வித்துவான் வீரமணிஐயரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவகாமசௌந்தரி, சண்முக நாதசர்மா (தர்மகர்த்தா- மனோன்மணி அம்மன் கோவில், நல்லூர்), உருத்திரதாஸ சர்மா (நல்லூர் கந்தசாமி கோவில் முன்னாள் - அர்ச்சகர்) மற்றும் சாரதாம்பாள் (தேவி), காலஞ் சென்ற மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிர மணியசர்மா (அராலி வண்ணப்புரம் சிவன் கோவில்), அமரர் யோகானந்தேஸ்வரி, அமரர் பாலசுப்பிரமணியசர்மா, ஜெயதீஸ்வரி (பாப்பா) ஆகியோரின் மைத்துனியும், சிவகனேக் குருக்கள், ஸ்ரீகோபாலகுருக்கள், ஆகியோரின் சிறிய தாயாரும், கிரிசாம்பாள் கிருஸ்ணானந்த குருக்கள், ஜெயபாலினி (காயத்திரி), தேவானந்தக் குருக்கள் (குகன்) - யசோதரஞ்சினி, அபிராமி - சோமாஸ்கந்தசர்மா, மற்றும் சந்தானலக்சுமி (சுபா), குருபரக்குருக்கள் ஆகியோரின் அன்பு மாமியாரும், சியாமளாதேவி - சுதர்சனக்குருக்கள், சியாமளவதனா - கணநாதக் குருக்கள், அமரர் கணேசராஜசர்மா, சியாமளரூபி - முரளீதரசர்மா, அமரர் ஸ்கந்தசிவ ரூபசர்மா, சியாமளஜனனி, பத்மலோஜினி, கிரிவாசன், கிரிசுதன், ஸ்ரீசந்தோஷ்சர்மா, தன்சிகா, பிரஜாபன், ஆகாஷ்நாத்சர்மா, கணஸ்ரீசர்மா, ஸ்ரீராம்சர்மா, ஸ்ரீலக்ஷ்மன்சர்மா ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு: 077 263 9565**
**077 306 9565**

(cs26852) (N.1)

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம்
05 . 09 . 1942

மறைவு
06 . 11 . 2023

### திருமதி படிகலிங்கம் சொர்ணகாந்தி

இல.38, கச்சேரி நல்லூர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி படிகலிங்கம் சொர்ணகாந்தி அவர்கள் நேற்று (06.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், அமரர் சதாசிவம் படிகலிங்கத்தின் அன்பு மனைவியும், அமரர்களான கருணானந்தம் (பெரியதம்பி), செல்வரத்தினம், தியாகராஜா மற்றும் பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற (Dr) றஞ்சினி மற்றும் கௌரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரராஜசிங்கம் ஸ்ரீகாந்தனின் (கனடா) அன்பு மாமியாரும், நிருஜா, அக்ஷரா ஆகியோரின் பேர்த்தியும், விஷாந்தின் பூட்டியும், பரஞ்சோதி (பிரான்ஸ்), அமரர் ரங்கநாதன், ரவீந்திரன் (பிரான்ஸ்), தர்சினி (கனடா), தர்மினி (சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தனேஸ்வரி, மாலினி, சயந்தினி (பிரான்ஸ்), சிவநேசநாதன் (கனடா), ரஜீபன் (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் மாமியும், நிருஜன் (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), நிருஜா, நிதர்சன், நிசாந்தன் (பிரான்ஸ்), பிருந்தினி (மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலை), கௌதமன், அபிஷாந், ஸ்வேதா (பிரான்ஸ்), திரிஷா, தானியா, ரெசிக்கா (கனடா), அபிநயா (யா/வேம்படி உ.பா), ஹரிஷணன் (யா/இந்து) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல.38, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தர்மினி - 077 904 2390**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 26864) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், கொட்டடிப் பகுதியிலுள்ள தனியார் விடுதியொன்றில் முதியவர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தென்னிலங்கையைச் சேர்ந்த லால் பெரேரா (வயது –61) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர் கடந்த மூன்று நாள்களாக அந்த விடுதியில் தங்கியிருந்துள்ளார் என்பது பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம–20–26)


## ஆட்கள் தேவை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கி வரும் எண்ணை உற்பத்தி தொழிற்சாலையான **Venkadeshwara Agro Industry (PVT) Ltd** யில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

கணக்காளர் (பெண்)
ஆய்வக உதவியாளர் (பெண்)

ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை **suganthon@gmail.com** எனும் மின்னஞ்சலுக்கு சமர்பிக்கவும்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07 • 05 • 1951

விண்ணில் 20 • 10 • 2022

அமரர்

### சுசீலாதேவி தில்லைவனராசா

திதி: தசமி (07.11.2023)

ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உம் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலை குலைந்து போகின்றோம் அம்மா!
அன்னையின் ஆத்மா
இறைபதம் சரணடைய பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

உமது பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(cs.52776) (N.1)

## மரண அறிவித்தல்



### திரு.அந்தோனிப்பிள்ளை கிளபோடாசியஸ் (யம்பிள்)

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும் இல.3. அடம்பன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அந்தோனிப்பிள்ளை கிளபோடாசியஸ் கடந்த (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா செபமாலை தம்பதியரின் அன்பு மகனும். இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும். டன்சினி (UK). டெல்சியா (DO பிரதேச செயலகம். யாழ்ப்பாணம்). துவாரகா. காலஞ்சென்ற டாளிங்சன். டெளிங்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும். லதா. குவாட்டஸ் (பிரான்ஸ்). றூபா (ஜேர்மன்). கொண்சலா (பிரான்ஸ்). காலஞ்சென்ற சம்மாட்டி ஆகியோரின் அன்புச் சகோதரனும். ரவி (UK). முரளிதரன் (DO பிரதேச செயலகம். வேலணை). பாலேந்திரா (யாழ். மாநகர சபை) ஆகியோரின் மாமனாரும். டார்வின். டியானி (UK). நிஹானி. மெர்லினா. ஆரோன். போவாஸ். லேயா. சாமுவேல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 26861)A-1 தகவல்: மகள் டெல்சியா - 077 614 7013

## போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்
## வழங்குநர்களையும் ஒப்பந்ததாரர்களையும் பதிவு செய்தல் - 2024

யாழ் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2024ம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா.1,000.00ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக்கூடிய காசுக்கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல்-2024"எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2023.12.07ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம். மேலும் இது தொடர்பான விபரங்களை யாழ் போதனா வைத்தியசாலை மின்னஞ்சலில் www.thjaffna.lk பார்வையிடலாம்.

| உருப்படி இல | பொதுப்பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுதுபொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதிபண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTVகமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய றோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள், நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சகலவிதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்புமெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை போன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி. விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லாவிதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணிதுவைக்கும் தூள், பார் சவர்க்காரம், சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப், பற்றிகள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லாவிதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சகலவகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன் பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை, தினமுத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயுறெகுலேட்டர், காஸ் பனர், காஸ் குழாய். |
| A - 19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதியினர், சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணை உறை, GS Towel) |
| A – 20 | அலுவலக அடையாளஅட்டை மற்றும் பெயர்ப் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறை மற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B-05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / Xகதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலகஉபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம்,புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக் குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயுஅடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |
| C - 13 | கழிவுகளை அகற்றுதல் தொடர்பான சேவை |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகலவிதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டிடநிர்மாணம், கட்டிடபுனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மாண வேலைகள். |
| E – 03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F – 01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகலவிதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G – 01 | (சிற்றுண்டி வகைகள், உணவுப்பொதிகள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை) |


விதிமுறையும் நிபந்தனைகளும்:

01. வழங்கல்கள், சேவைகள் 2024 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. விண்ணப்பதாரர்கள் இலங்கையில் பதிவு செய்யப்படுவதுடன், பதிவு செய்யப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தின் தொலைபேசி, தொலைநகல், மற்றும் மின்னஞ்சல் வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். (வணிகப் பதிவின் நகல் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
03. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளிமூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
04. ஏதேனும் சந்தர்ப்பங்களில் பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பதாரரின் தகுதிகள் திருப்திகரமாக இல்லை என தெரியவரும் போது காரணங்கள் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
05. பொருட்கள் மற்றும் சேவைகளை ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
06. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.
07. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
08. வழங்குநர்களைப் பதிவுசெய்யும் போது, வியாபாரப் பெயர் பதிவுச் சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள்களும் வியாபார நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையானஅனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.
09. மேலதிக விபரங்கள் பெற விரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
10. உருப்படி இலக்கம் B [அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவ பொருட்கள்] க்கு நீங்கள் பதிவு செய்யும் போது பின்வரும் தகவல்களையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
    A).தயாரிப்பு எல்லை [Product range]
    B).உற்பத்தியாளர் அங்கீகாரக் கடிதம் [Copy of manufacturer authorization letter]
    C).CDDA நகல்
    D).நிறுவுதல் அடிப்படை -[Installation Base] (இது தொடர்பான மேலதிக தகவல்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்க முடியும்)

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21.01.1933 — மறைவு 20.10.2022

திதி - 07.11.2023

திரு. வைத்திலிங்கம் சோமசுந்தரம்
Kokuvil West Mudhali Kovil Trustee

Building Department Colombo,
Sambasivam & Co.

தகவல் – குடும்பத்தினர்

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 08 . 1936



மறைவு 07 . 11 . 2005

### பிலேந்திரன் ஜேம்ஸ்

அன்பான அப்பா,

நீங்கள் காட்டிய பாதையில்
பயணிப்போம் எம் உயிருள்ள வரை
உங்களை மறவோம்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

9AV வீதி,
கொழும்புத்துறை.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
குடும்பத்தினர்
077 636 6038

## மரண அறிவித்தல்



### இன்னாசிமுத்து மரியநாயகம்

பெரியவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து மரியநாயகம் 05.11.2023 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி றோசலினின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இன்னாசிமுத்து விக்ரோரியாபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், எமில், நிமல், சுதா, டனி, ஜெனி, வினி, சைலு ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வம், புஸ்பா, ஜெயக்குமார், வினோ, மெற்றில்டா, நவின் ஆகியோரின் அன்பு மாமனாரும், ராஜ், அபிஷா, வினுஷா, அபிஷேக், அமினாஸ், ஜெனோசியா, டிஷான், டினுஜா, துஷாரா, றொனால்டோ, செரோமிக்கா, பவிஸ்ரண், டீபிகா, அஸ்வின், அனுஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.11.2023) பி.ப. 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்சென்று புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து, யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CR 40943)A-1

தகவல்: குடும்பத்தினர்.

# வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)

# பதவி வெற்றிடங்களுக்கு வெளிவாரி விண்ணப்பம் கோரல்

வலிகாமம் பனை தென்னை வள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடம் நிரப்புவதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்ப முடிவுத்திகதி 22.11.2023ம் திகதி ஆகும்.

**1. பதவிக்கான பெயர் :- கணக்காளர்**

குறியீட்டு இலக்கம் :- 104/08
சம்பள அளவுத் திட்டம் :- 20665-260x10-280x10-26065
247980-3120X10-3360X10-312780
வெற்றிடம் :- 01

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

- கூட்டுறவுப் பணியாளர் 9 வது சம்பளத் திட்டப்பதவியில் கணக்காளர்/உள்ளகக் கணக்காய்வாளர்/கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
- கூட்டுறவு ஊழியர் 10வது சம்பளத்திட்டப் பதவியில் கணக்காளர்/உள்ளகக் கணக்காய்வாளர்/கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம்/அதற்குச் சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளிவிபரவியல்/வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
- இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா / இதற்குச் சமனான தகைமை. மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

**அல்லது**

- கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.
- க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

**2. பதவிக்கான பெயர்: - களஞ்சிய முகாமையாளர்**

குறியீட்டு இலக்கம் :- 208/11
சம்பள அளவுத் திட்டம் :- 19280-190x10-210x10-23280
231360-2280X10-2520X10-279360
வெற்றிடம் :- 01

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

- கூட்டுறவுப் பணியாளர் 12வது சம்பளத் திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

- கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.
- க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீ ரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**3.பதவிக்கான பெயர் களஞ்சிய முகாமையாளர்**

குறியீட்டு இலக்கம் :- 208/12
சம்பள அளவுத் திட்டம் :- 18820-170x10-185x10-22370
:- 225840-2040X10-2220X10-268440
வெற்றிடம் :- 02

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

- கூட்டுறவுப் பணியாளர் 13வது சம்பளத் திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

- கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி.
- க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

- கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி.
- க.பொ.த.சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி உட்பட 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு**

1. விண்ணப்ப முடிவுத்திகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்கழிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தாங்கள் கடமை புரியும் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமது கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப் படாதுவிடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. தகுதியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படமாட்டாது.
3. சங்கம் கோரும் பிணைப்பணத்தினை ரொக்கமாக செலுத்துவதுடன் சங்கம் கோரும் ஆதனப் பிணையும் செலுத்துதல் வேண்டும்.
4. **விண்ணப்ப முடிவுத்திகதி** :- **22.11.2023**
5. சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்ப படிவத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களின் போட்டோப்பிரதிகளையும் இணைத்து பதிவுத்தபாலில் **பொதுமுகாமையாளர் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பிப்பிலிச்சந்தி மானிப்பாய்** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,**
**மானிப்பாய்.**

(N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் நேற்று சர்ச்சை வெற்றி!



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் இலங்கையைத் தோற்கடித்தது பங்களாதேஷ். சர்வதேச கிரிக்கெட்டில் முதன்முறையாக நேரம் தவறியமைக்காக (ரைம் அவுட்) மத்தியூஸின் விக்கெட்டை சர்ச்சையாகப் பெற்று இந்த வெற்றியைப்திவு செய்தது பங்களாதேஷ்.

இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடியது. குசல் பெரேரா வழக்கம் போல் ஏமாற்றினார். அவர் 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். குசல் மெண்டிஸின் இன்னிங்ஸ் 19 ஓட்டங்களுடன் முடிவு கண்டது. பதும் சிசங்க, விக்கிரம இருவரும் இணைந்து அணியை மீட்டனர். 41 ஓட்டங்களுடன் பதும் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் சமரவிக்கிரமவும் வீழ்ந்தார். இதன் பின்னர்தான் பங்களாதேஷ் அணியால் வரலாற்றுச் சர்ச்சை அரங்கேற்றப்பட்டது. மத்தியூஸ் களமிறங்கியபோது அவருடைய தலைக்கவசத்தின் பட்டி அறுந்தது.

இதனால் அவர் பிறிதொரு தலைக்கவசத்தை மாற்றினார். விதிகளின் அடிப்படையில் ஒரு வீரர் ஆட்டமிழந்த பின்னர் மறுவீரர் இரண்டு நிமிடங்களுக்குள் களமிறங்கியிருக்க வேண்டும். தலைக்கவசம் மாற்ற ஏற்பட்ட சாதகத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய பங்களாதேஷ் அணி நடுவரிடம் ஆட்டமிழப்பைக் கோரியது. நடுவரும் விதிகளுக்கு அமைய ஆட்டமிழப்பை வழங்கினார். மத்தியூஸ் எத்தனை தடவைகள் முயன்றும் பங்களாதேஷ் வீரர்கள் முடிவை மாற்றவில்லை. எனினும் அசலன்கவின் அற்புதமான சதம் கைகொடுக்க அனைத்து விக்கெட்களையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்ப வீரர்களான ரன்சிட் ஹசன், லித்தன் டாஸ் இருவரும் பிரகாசிக்கவில்லை. 41 ஓட்டங்களில் இருவரையும் பங்களாதேஷ் இழந்தது. அதன்பின்னர் இணைப்பாட்டம் அமைத்த சகிப் அல் ஹசன், சான்ரோ இருவரும் இலங்கையிடமிருந்து ஆட்டத்தைப் பறித்தெடுத்தனர். மத்தியூஸின் விக்கெட்டுக்காக இவர்கள் இருவருடனும் இலங்கை வீரர்கள் வார்த்தைப் போரிலும் ஈடுபட்டனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து அணி 200 ஓட்டங்களைத் தொட்ட பின்னரும் இலக்கு சரிக்கப்படவில்லை. சான்ரோ 90 ஓட்டங்களுடனும், சகிப் அல் ஹசன் 82 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். எனினும் பங்களாதேஷ் அணியிடம் இருந்து இலங்கை அணியால் வெற்றியைப் பறிக்க முடியவில்லை. 53 பந்துகள் மீதமிருக்க 7 விக்கெட்களை இழந்து வெற்றி பெற்றது பங்களாதேஷ். (ம)

## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 34**

ஆப்கானிஸ்தான் - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான இன்றைய (07.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

**மெகா பரிசு**

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?


விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

**இன்றைய ஆட்டம்**

ஆப்கானிஸ்தான் — அவுஸ்திரேலியா





இடம் : வான்கடே
நேரம்: பி.ப. 2.00

# இரண்டு புள்ளியா? மனித உரிமையா?

## ஆஸியைச் சீண்டும் நவீன்



உலகக்கிண்ணத் தொடரில் இரண்டு புள்ளிகளா அல்லது மனித உரிமையா? இதில் எந்த நிலைப்பாட்டை அவுஸ்திரேலிய அணி எடுக்கப்போகின்றது என்பதைக் காண ஆர்வமாய் உள்ளேன் என்று அவுஸ்திரேலிய அணியைச் சீண்டியுள்ளார் ஆப்கானிஸ்தான் அணியின் வீரர் நவீன் உல் ஹக்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்கு ஆப்கானிஸ்தான் அணி சுற்றுப் பயணம் மேற்கொள்வதாய் இருந்தது. ஆனால், ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு எதிரான உரிமைகள் நசுக்கப்படுகின்றன என்று தெரிவித்து இந்தத் தொடரில் விளையாட அவுஸ்திரேலிய அணி மறுத்தது. இதையடுத்துத் தொடர் கைவிடப்பட்டது. ஆப்கானின் அரசியல் நிலையைக் காரணம்காட்டி அந்த அணியுடன் விளையாட மறுத்தமைக்கே இப்போது நவீன் பதிலடி கொடுத்துள்ளார். (ம)

**தினம் ஒரு பரிசு — நாள் 32 இன் வெற்றியாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| எஸ்.பகவதி | - சுழிபுரம் | வ.சங்கரன் | - அராலி தெற்கு |
| கி.யனுசன் | - வட்டக்கச்சி | ஜே.தருண் | - மன்னார் |
| ஜே.ரேனுசன் | - யாழ்ப்பாணம் | எல்.விபூஷன் | - இரணைப்பாலை |
| சி.நிர்மலன் | - திருநெல்வேலி | அ.துர்விகா | - நெடியகாடு |
| ச.சுரபி | - இணுவில்கிழக்கு | எஸ்.கீர்த்தனன் | - கிராமக்கோடு |
| யோ.சாய்சரண் | - சிறுப்பிட்டி | யு.யுகதாரணி | - கள்ளப்பாடு |
| ச.செல்வக்குணசந்திரன் | - ஊடக்கரை | வி.விஸ்வகுமார் | - மானிப்பாய் |
| ய.அபிஷாந் | - வதிரி | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரதன் காலமானார்

வவுனியா, நவ. 7

வவுனியா முன்னாள் நகர சபை உப தவிசாளரும் வவுனியாவின் பிரபல இந்து நாகரிக ஆசிரியருமான ரதன் சுகவீனம் காரணமாக நேற்று அதிகாலை வவுனியா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். (ஒ-இ)

## யாழ்ப்பாணக்...

அதன் பின்னர் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் முன்பாக வுள்ள பழைய கச்சேரிக் கட்டடத் தையும் சென்று பார்வையிட்டுள்ளார். தொல்பொருள் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பழையகச்சேரிசீனநிறுவனத்துக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்த நிலையில் சீனத்தூதுவர் அதனை நேற்றுப் பார்வையிட்டுள்ளார்.

நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையில் வைத்து உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்விலும் சீனத் தூதுவர் பங்கேற்றார்.

நேற்று மாலையில் காரைநகர், சாம்பலோடைப் பிரதேசத்தில் சீன அரசின் உதவியுடன் அமையவுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் அவர் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

(அ-ஒ-20-27-66-100-131)

## ஆளுநரின்...

திருகோணமலை, நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இடம்பெற்று வருகின்ற பொரலுகந்த ரஜமாகா விகாரைப்பகுதியில் நேற்றுக்காலை பிக்குகள் மற்றும் சிங்கள மக்களால் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் அதற்கு அந்தப்பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக கிழக்கு ஆளுநரிடம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதையடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் ஆளுநரால் கட்டுமானங்களுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் தடையுத்தரவையும் மீறி கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக பொதுமக்கள் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன் பின்னர் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே, நேற்றையதினம் காலை குறித்த பகுதியில் இரண்டு புத்தர்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வருகின்ற இந்தப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும், புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இந்தப்பகுதிகளைச்சூழ சிங்கள மக்களை குடியேற்றும் திட்டம் உள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

(அ-ஒ-50)

## விளையாட்டுத்துறை...

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க இலங்கைக் கிரிக்கெட் சபைக்கான இடைக்காலக் குழுவொன்றை நியமித்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில் பதிலளிக்கும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கிரிக்கெட் சபைக்கான இடைக்காலக் குழுவுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் அனுமதி வழங்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

பொதுவாக கிரிக்கெட் போன்ற நிறுவனங்களுக்கு இடைக்கால குழு நியமிக்கப்படும்போது ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும் எனவும் ஆனால், விளையாட்டுத்துறை அமைச்சர் அது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## ரணிலால்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன்போதே அமைச்சர் அலிசப்ரி தலைமையில் இந்த அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களான டிரான் அலஸ், காஞ்சன விஜயசேகர, மனுஷ நாணயக்கார ஆகியோர் இந்தக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

(அ-ஒ-44)

## 237 பில்லியன்...

இது கல்விக்காக ஒதுக்கப்படும் முழுமையான தொகை அல்ல எனவும் மாகாணப் பாடசாலைகளின் முதலீட்டுச் செலவுகள் மற்றும் நிர்வாகச் செலவுகள் அனைத்தும் மாகாணசபைகளின் கீழ் உள்ள கல்வி அமைச்சாலேயே மேற்கொள்ளப்படுவதாகவும், இந்த அனைத்து நிதிகளையும் ஒன்று சேர்த்தே அரசாங்கம் கல்விக்காக ஒதுக்கும் முழுமையான தொகையைக் கணக்கிட வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே கல்வி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்கள் காரணமாக புதிய தவணைக்காக இந்த வருடம் மார்ச் மாதம் பாடசாலைகளை காலதாமதமாகவே ஆரம்பிக்க வேண்டியிருந்தது. ஆனால், அந்தத் தாமதங்களைக் குறைத்து 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் புதிய தவணை ஆரம்பிக்கப்படும். அதன்படி, அடுத்த வருடத்தில் இருந்து, தரம் ஒன்று முதல் தரம் 11 வரையிலான பாடத்திட்டத்தை அதே வருடத்துக்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம். இதன் ஊடாக 2025 ஆம் ஆண்டு கல்வியாண்டை வழமைபோன்று நடத்தமுடியும்.

மேலும், நீதிமன்ற நடவடிக்கைகள் காணப்பட்டாலும்கூட அவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நேர அட்டவணையின் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி மாதம் உயர்தரப் பரீட்சையை நடத்தமுடியும் என்று நான் நினைக்கின்றேன். நேரத்தை முறையாக முகாமைத்துவம் செய்து, தற்போது தாமதமாக நடத்தப்படும் அனைத்துப் பரீட்சைகளையும் கட்டம் கட்டமாக நடத்துவதன் மூலம் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டாகும் போது குறித்த வருடத்துக்குரிய பரீட்சைகளை அதேவருடத்தில் நடத்தி முடிக்க அவசியமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

அதேபோன்று, 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது நடத்தி முடிக்கப்பட்ட சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாதம் மூன்றாவது வாரத்தில் வெளியிடப்படவுள்ளன. கல்வி நிர்வாக சேவையில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சைகளும் நிறைவடைந்துள்ளன. விரைவாக நேர்முகத் தேர்வுகளை நடத்தி அவர்களுக்கான நியமனங்களை வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மேலும், ஆசிரியர் கல்வியியலாளர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் ஆசிரியர் வெற்றிடங்கள் உட்பட கல்வி சேவையில் நிலவும் அனைத்து வெற்றிடங்களையும் அடுத்தவருடம் பாடசாலைகளை ஆரம்பிக்க முன்னர் நிரப்புவதற்கு அவசியமான பணிகளை முன்னெடுத்துள்ளோம்- என்றார்.

(அ-ஒ-44)

## பொய்...

இறக்குமதி செய்யப்படாது என சீனத் தூதுவர் கீ சென்ஹொங் யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்கும் பயணம் மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர். இதன்போது, யாழ்ப்பாணம், நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக 500 உலருணவுப் பொதிகளை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான சீனத்தூதுவர், சீனாவில் இருந்து இலங்கைக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனா சென்றபோது இலங்கைக் கடலுணவை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யவே ஒப்பந்தம் செய்யப்பட்டது.

சீனாவில் இருந்து இலங்கைக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. விசேடமாக வடக்கு மாகாணத்துக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. பொருளாதார நெருக்கடியின்போது இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்த சீனாவே முதலாவதாகக் கை கொடுத்தது. எதிர்காலத்திலும் கை கைகொடுக்கும்.

15 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளைச் சீனா வழங்கவுள்ளது. 5 மில்லியன் உணவுபொருள்களாகவும் 5 மில்லியன் மீனவர்களுக்காகவும் 5 மில்லியன் வீட்டுத் திட்டத்துக்கும் வழங்கவுள்ளது. சீனா உலகின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதார நாடு. அங்கு மிகப் பெரியசந்தை வாய்ப்பு உள்ளது. உங்களை அதற்காகவே வரவேற்கிறோம். சீனமுதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர். வடக்கு மக்களும் அதனை வரவேற்கத் தயாராகவுள்ளனர் என்று நம்புகிறேன் - என்றார்.

(அ-ஒ-27-66)

## தவறான முடிவெடுத்து...

மனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

(அ-ஒ-9)

## தவறான...

பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அங்கு நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

(அ-ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கு வேட்டைக்காக மலையகம் இரையானது

## அமைச்சர் ஜீவன் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 7

வாக்கு வேட்டைக்காக மலையகச் சமூகம் பயன்படுத்தப்பட்டு பலிக்கடாவாக்கப்பட்டது இவ்வாறு ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்ற மலையகம்- 200 நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் இ.தொ.கா. பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மக்கள் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசியல், தொழிற்சங்கப் பேதங்களுக்கு அப்பால் பிரிவினைகளைக் களைந்தெறிந்து மலையக சமூகமாக நாம் அனைவரும் ஒன்றிணையவேண்டும். இந்த நாட்டின் அபிவிருத்திக்கு எமது மக்கள் பங்களிப்பு வழங்கியபோதிலும் இலவசக் கல்வி, சுகாதாரம் என்பன எமது சமூகத்துக்கு முறையாக - முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதே யதார்த்தம். அரசியல் ரீதியிலான தீர்மானங்களைவிட எமது சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையான மாற்றம் அவசியம். இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இந்திய அரசின் பங்களிப்பு பெரிதும் உதவுகின்றது.

1994இல் குடியுரிமை பறிக்கப்பட்டது. குடியுரிமைப் பிரச்சினை முழுமையாகத் தீர்வதற்கு 2003 வரையான காலமெடுத்தது. வாக்கு வேட்டைக்காக எமது சமூகம் பயன்படுத்தப்பட்டது. மாற்றம் என்பது இங்கிருந்துதான் துரிதமாக ஆரம்பமாகவேண்டும். மலையகத்தைப் பொறுத்தமட்டில் கலாசாரம் மாற வேண்டும், சிந்தனைகள் மாற வேண்டும். பிரிவினையைத் தாண்டி அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் என நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைந்து சமூகத்தை முன்னோக்கி கொண்டு செல்ல நாம் தயார்- என்றார்.

(ச-44)


**Private Teacher தேவை**

சாவகச்சேரியில் அமைந்துள்ள வீட்டிற்கு வந்து கற்பிக்கக்கூடிய ஆரம்ப பிரிவு (தரம் : 4.5) அனுபவமுள்ள தமிழ்பாட ஆசிரியர் தேவை.

**077 858 1486**

**குழு/தனி வகுப்பு**

தரம்-01, தொடக்கம் தரம்-05 வரையான மாணவர்களுக்கான தனி மற்றும் குழு வகுப்புக்கள் தமது பொருத்தமான இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

ஆசிரியர் (NDT, B.Ed)

**077 2457 867 / 076 155 4532**

**ENGLISH / TAMIL மொழிபெயர்ப்பாளர்கள் அலுவலக ஊழியர்கள்**

**VACANCY**

யாழ். பிறவுண் வீதியில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு English or தமிழில் தட்டச்சு செய்யக் கூடிய (Computer Typing) அலுவலக ஊழியர்கள் தேவை.

சம்பளம் 40,000 +

தொடர்புகளுக்கு:

**0777 111 444**

**பனம் பழம் தேவை**

30 ரூபா வீதம் பனம்பழம் உங்களின் இடங்களுக்கு வந்து கொள்வனவு செய்யப்படும். சேகரித்து தரக்கூடியவர்களும் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:

**0777 157 070**

**காணி, கடை, கட்டடத்துடன் காணி விற்பனைக்கு உள்ளன**

1. பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள காணி 5 1/4 பரப்பும் பாரிய களஞ்சியமும் சேர்த்து விற்பனைக்கு உள்ளது.
2. K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள களஞ்சிய வசதியுடன் கூடிய கடை விற்பனைக்கு உள்ளது.
3. A-9 வீதி, திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் பாரிய கட்டடம் உணவகம் என்பன விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:-

**077 3866 250**

(CR 40940) A-1

**தரமான காணி விற்பனைக்கு**

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 52 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

- ✻ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✻ **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
- ✻ 18 அடிப்பாதையுடன்
- ✻ வட மாகாணசபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- ✻ யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
- ✻ மிகவும் நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- ✻ வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ✻ பரம்பரைக்காணி, பலவருடகால தோம்பு, தூய உறுதி.
- ✻ தரகர் தேவையில்லை.

**பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை

1 பரப்பின் விலை 24 லட்சம்

**Golden Real Estate (Pvt) Ltd.**

**Director & Owner :- T.Kalaithasan**

**076 755 8606, 077 623 4204**

(CS 26826) A-1

**1 நாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

**பிறிமா பாம்** ஒரு நாள் சிவப்பு, வெள்ளை, முட்டைக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒவ்வெரு வியாழக்கிழமையும் பெற்றுக்கொள்ள முடியும். தேவை உள்ளவர்கள் முற்பதிவுசெய்யவும். பண்ணையாளர்களுக்கு விநியோகம் இலவசம்.

**நியூ சிற்றி பாம்** (சின்னக்கடை மாக்கற்) முன்பாக

**குருநகர்- யாழ்ப்பாணம்.**

**வேலையாட்கள் தேவை**

யாழ். மருதனார்மடம் பகுதியில் இயங்கிவரும் ஹாட்வெயார் ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவை.

- ✻அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- ✻மருதனார்மடத்தை அண்டிய பகுதியில் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
- ✻சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**077 916 7289 / 0777 391 450**

**342 A, K.K.S. வீதி, மருதனார்மடம்**

✻ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும்.

(CS 28866) A-1

**அமெரிக்க லொத்தர் விசா**

✻பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

✻அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

இன்றுடன் நிறைவடைகின்றது 07.11.2023

**திருமுருகன் கொம்நெற்**

321, K.K.S. Road, Jaffna. T.P: 0777 55 45 28

இன்றுடன் நிறைவடைகின்றது

07-11-2023

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

**காத்திருக்காமல் உடனே பதியுங்கள்**

**2024ல் நீங்களும் அமெரிக்காவில்**

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

**V2 Travels**

**0768226244**

**0768226241**


## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 . 12 . 1942 | 05 . 11 . 2023 |

**அமரர் கணபதி வேலாயுதம்**

கணபதி குடும்பம்

076 2198317

075 9727312

(CR 40949) A-1

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 08 . 1946 | 05 . 11 . 2023 |

**திருமதி கமலாதேவி தில்லைநடராஜா**

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி தில்லைநடராஜா கடந்த (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து சிவகொழுந்து தம்பதியரின் மகளும், சரவணமுத்து செல்லமுத்து ஆகியோரின் மருமகளும், தில்லைநடராஜா அவர்களின் அன்பு மனைவியும், மோகனகுமரன், தேவதாஸ், ரவி, சிவதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், யீவரஞ்சினி, மோகினி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், மோகுலன், நிரோசன், யிரோசன், கரீஸ், அபினாத், ரக்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சுந்தரேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன், வசந்தமல்லிகா, காலஞ்சென்ற கமலேஸ்வரன், யமுனமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தில்லைநாயகி, விஜயலக்சுமி, சுப்பிரமணியம், சரஸ்வதி, செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.11.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 172 6680**

(CS 26865) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.